Ministry of Indigenous Medicine Sri Lanka





# කාර්ය සාධන වාර්තාව
# செயலாற்றுகை அறிக்கை
# PERFORMANCE REPORT
# 2012



Design By : D.G.R.T.Panduka







Web : www.indigenousmedimini.gov.lk

https://www.facebook.com/pages/Ministry-of-Indigenous-Medicine/130748173783098

# சுதேச மருத்துவத்துறை அமைச்சு

# செயலாற்றுகை அறிக்கை – 2012

# சுதேச மருத்துவத்துறை அமைச்சரின் செய்தி



வைத்திய அறிவே மனிதனின் ஆரம்பம் ஆகும். ஒவ்வொரு வளர்ச்சி பெற்ற நாகரீக சமூகத்திலும், அவர்களின் சூழலுக்கு ஒத்திசைவானதொரு வைத்திய ஞானம் மற்றும் வைத்திய முறை இருந்தது என்பதற்கு வரலாறுகள் சான்றுபகர்கின்றன. வரலாறுகளில் காணப்பட்ட வைத்திய முறைகளில் மிகப் பழமைவாய்ந்ததும், அழிவடையாது தற்போதுள்ளதுமான ஒரே வைத்திய முறை ஆயுர்வேதமாகும். இந்து நதிக்கரையில் பிறந்து கிட்டத்தட்ட ஐயாயிரம் ஆண்டுகளாக போசித்து வளர்ச்சியடைந்த இந்த ஆயுர்வேதமானது, தெற்காசியா முழுவதிலும் பரந்து ஆரோக்கியப் பாதுகாப்புக்கு வழிவகுத்தது.

இந்நாட்டுக்கு ஆயுர்வேதம் வந்தது புத்த சமயத்துடன் என்பது அறிஞர்களின் கருத்தாகும். எனினும் அதற்கு முன்னரே இந்நாட்டிற்கேயுரிய வளர்ச்சி அடைந்த சுதேச வைத்திய முறையொன்று இருந்ததென செவிவழிச் செய்திகள் சான்று பகிர்கின்றன. புத்த சமயத்தின் வருகையோடு, இந்து சமூகத்தின் வைத்திய முறையொன்று நாடெங்கிலும் பரவியாதாகவும், வைத்திய அறிவு வளர்ச்சி அடைந்ததாகவும் வரலாறுகள் கூறுகின்றன.

இந்தமருத்துவக் கலையானது கண்டி யுகத்தில் வாழையடி வாழையாக நாடெங்கிலும் பரவி சாதாரண மக்களிடத்திலும் ஒரு புரிதலுடன் திகழ்ந்துள்ளதென றொபட் நொக்ஸின் அறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது. இம்மருத்துவ முறைமை, வானியல் மற்றும் சாந்தி கருமம் ஆகியவற்றால் போசிக்கப்பட்டதாக இலங்கையின் ஆயுர்வேதம் திகழ்ந்துள்ளது. காலனித்துவவாதிகளின் பிடியில் சிக்கிய தேசிய மரபுரிமைகளில் பாரம்பரிய மருத்துவமும் முக்கியமானதாகும். மேலைத்தேய சாயல்கொண்ட காலனித்துவ மனோநிலையில் எமது மருத்துவம் நாட்டு வைத்தியம் என்றும் நாட்டு வைத்தியர் என்றும் நிந்திக்கப்பட்டது.

1948 சுதந்திரம் பெற்றாலும் 1956 ஆம் ஆண்டிலேயே புதுப்பொழிவுடன் எழுந்துநிற்க முடிந்தது. அதனால் தான் தற்போதயை வளர்ச்சியை அடைய முடிந்தது. இன்று இந்த வைத்திய அறிவு பல்கலைக்கழக கல்வி வரை முன்னேரியுள்ளது. இன்றளவில் தொழில்சார் நிபுணர்கள், தொழில் சங்கங்கள், சிகிச்சை முறைகள், உற்பத்தி ஆலைகள் மற்றும் நாடுதழுவிய மருத்துவர்கள் அதற்கும் மேலாக அமைச்சரவை அமைச்சர் ஒருவரையும் கொண்டுள்ள வரையில் இத்துறை முன்னேறியுள்ளது. ஆயுர்வேதம், இலங்கை ஆயுர்வேதம், சித்த, யுனானி, ஹொமியோபதி போன்ற வைத்திய முறைகளையும் உள்ளடக்கி தேசிய சுகாதாரத்தினை பாதுகாப்பதற்கு பங்களிப்பினை நல்குகின்றது

ஆயுர்வேதமென்பது ஆயுள் பற்றிய அறிவு. வாழ்வை காக்கும் வழி மற்றும் நீண்ட காலம் மகிழ்ச்சியோடு வாழ்வதற்கான வழிகாட்டி எனவும் அறியப்படுகிறது. உலகில் காணப்படும் நிம்மதியற்ற வாழ்க்கைக்கு இவ்வாயுர்வேதம் ஓர் வரப்பிரசாதமாகும். தொற்றாத எனினும் விரைவாக பரவும் பல்வேறு நோய்களும் அவற்றுக்கான சிகிச்சைகளுக்கு தாங்க நேரிட்டுள்ள அதிகபடியான செலவுகளும் முன்னேற்றம் கண்டுள்ள உலகம் ஏற்று நிற்கிறது. நீரிழிவு, இருதய நோய்கள், குருதி அழுத்தம், புற்றுநோய், சிறுநீரக தொற்றுகள், உடற்பருமன் இவை பொதுவாக வயது வித்தியாசமின்றி காணப்படும் நோய்களாகும். இதனால் மாற்று மருந்து மற்றும் சிகிச்சையின்பால் உலகத்தின் கனவனம் திரும்பியுள்ளது. அதனால் ஆயுர்வேதத்தினை கட்டியெழுப்புவதற்கான கடமை எம்மிடம் உள்ளது.

இந்த மருத்துவ முறையியல் நோய் அறிகுறிகள், சிகிச்சை முறைகள் மாத்திரமின்றி அறம், பொருள் மற்றும் சமுதாய நீதிகளும் அடங்கிய புலமை விடயங்களையும் உள்ளடக்கிய வாழ்க்கைத் தத்துவமாகும். இயற்கையுடன் ஆழமான இணைப்பைக் கொண்டுள்ள இந்த முறைமையானது மருந்துகள் மற்றும் தாவர பல்வகைமை போன்றே விசாலமானது.

அதிமேதகு மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் உன்னதமான மஹிந்த சிந்தனை ஆரோக்கியமான மக்கள் மற்றும் உன்னதமான ஊழியப்படையைக் கொண்ட ஆசியாவின் அதிசயமாக இந்நாட்டை முன்னோக்கி நகர்த்திவருகிறது. தங்கிவாழ்வதையும் அடிமைத்தனத்தையும் களைந்து தேசியமும் இனத்துவமும் எழுச்சி பெற்றுவரும் இந்த யுகத்தில் அதனுடைய நிலைக்கண்ணாடி போன்று திகழும் எமது பாரம்பரிய மருத்துவத்தை சுகாதார பாதுகாப்பின் முன்னோடியாக மாற்றியமைப்பதற்கு சுதேச மருத்தவத்துறை அமைச்சு இடையறாது உழைத்துவருகிறது.

**சாலிந்த திசானாயக்க**
**சுதேச மருத்துவத்துறை அமைச்சர்**

# சுதேச மருத்துவத்துறை பிரதி அமைச்சரின் செய்தி



ஆயுர்வேதம் என்பது ஆயுள் தொடாபான விஞ்ஞானம் எனும் அர்த்தத்தில் இருந்து சுதேச மருத்துவத்துறையின் முக்கியத்துவத்தினை யாரும் அறிந்துகொள்ள முடியும். இன்று மனிதன் முன்னரைவிடவும் நோயற்ற வாழ்வினை வாழிவதற்கு மிகுந்த ஆர்வத்தினைக் கொண்டுள்ளான்.

முற்காலத்தில் எமது நாட்டின் முன்னோர் பின்பற்றிய வாழ்க்கை முறையினால் நோயற்ற சக்கி மிக்க மனிதர்கள் இருந்தார்கள் என்பதினை துட்டகமுனு காலத்து வரலாறுகளில் இருந்து அறிந்துகொள்ள முடிகின்றது. அக்காலத்தில் மிகப்பலசாலியான பிள்ளைகளைப் பெற்றெடுத்த பெற்றோர்கள் பற்றி நாம் பேசுகையில் தெரிவது என்னவெனில், எங்கள் நாட்டில் அந்நாட்களில் காணப்பட்ட சரியான வாழ்கைமுறையென்பதாகும். அனைத்து பயிர்ச் செய்கைகளுக்கும் தனிப்பட்ட முறைகளைப் பின்பற்றிய மக்கள், அதனை நுகர்ந்ததினால் நோயற்றவர்களாகத் திகழ்ந்தனர். ஆயுர்வேத வைத்திய முறையானது இந்தியாவில் இருந்து வந்த பொழுதிலும், எமது நாட்டிற்கேயுரிய வைத்திய முறையொன்று எங்களிடமிருந்தது என்பதற்கு இராவணன் யுகம் சான்றுபகர்கின்றது. அதுவே சுதேசிய வைத்திய முறையாகும்.

காலனித:தவ ஆட்சியின் கீழ், எங்களுக்கான அனைத்து தனித்துவங்களையும் கைவிட்டு, மேலைத்தேயத்தை தேடியதனால் எமது அனைத்து தனித்துவங்களும் அழிந்து போய், இன்று நடைபெறும் அனைத்து அழிவுகளுக்கும் முகம்கொடுக்க வேண்டியதாக உள்ளது. அன்று பின்பற்றப்பட்ட நடைமுறைகளைக் கைவிட்டு, உடனடியான விளைவுகளின்பால் மனம் சென்றதனால், உடல் உழைப்போடு வாழ்ந்த மக்கள் இன்று நோயோடு வாழ்கின்றனர்.

வெளிநாட்டில் இருந்து கொண்டுவரப்படும் விஷ உணவுகளை உண்ணப்பழகியதினால், இன்று அனைத்துப் பிரிவினரும் நோய்களுக்குட்பட்டு நாட்டின் எதிர்காலத்தினை இருளடையச் செய்வதிலிருந்து மீட்பதற்கு, மூன்று தசாப்த கால யுத்தத்தினை முடிவுக்கு கொண்டுவந்த அதிமேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் தலைமையின் கீழ் மீண்டும் எமது உணவு முறைகளை உயிர்ப்பிப்பதற்கு முயலுவோம். இவ்வுணவுப் பழக்கவழக்கம் காரணமாக மக்கள் துன்பப்படுவதினால், அவர்கள் மீண்டும் எங்களின் பழைய உணவு முறைக்கு திரும்பியுள்ளனர். இந்நிலை இலங்கையில் மட்டுமல்லாது இம்மாற்றம் உலக நாடுகளிலும் காணப்படுகின்றது. இம்மாற்றத்தினை சாதகமாகப் பயன்படுத்தி, சுதேசிய வைத்திய உணவு முறைகளின் ஊடாகவும், எங்கள் ஆயுர்வேத முறைகளினூடாகவும் வெளிநாட்டினரைக் கவர்வதற்கு முடியும். அதுமட்டுமல்லாது, வெளிநாட்டு உல்லாசப் பயணிகளிடையேயும், எங்கள் ஆயுர்வேத முறைகள் தொடர்பாக மிகுந்த ஆர்வம் காணப்படுவது தெரியவந்துள்ளது. இதனால் ஜப்பான் போன்ற நாடுகளுக்கு எதிர்காலத்தில் சுதேச மருத்துவர்கள் சேவைக்காகச் செல்லும் காலம் வெகு தொலைவில் இல்லை.

எங்கள் உணவு முறையினை முன்னுக்கு கொணடுவருவாற்கு உகந்த முறை இந்த ஆயுர்வேத முறையேயாகும். முற்காலத்தில் இருந்தே பரம்பரையாக அவை பேணப்பட்டு வருவதினால், அவை மேலும் நவீனமயப்படுத்தப்படாமல் இருப்பதினால், மனித மனத்திற்கு அவற்றினைப் பெற்றுக்கொடுப்பது இலகுவான காரியமாக அமைந்துள்ளது. இம்முறையினை சமூகத்திற்கு வழங்குவதற்கு சிறந்த முறை என்னவெனில், பாடசாலைக் கல்வியில் அவற்றினை இணைப்பதாகும். இதன் மூலம் பிள்ளைகளும் பெற்றோரும் அறிவினைப் பெற்றுக்கொள்வதனால், இந்தச் செய்தியானது மிகவிரைவில் சமூகத்தினைச் சென்றடையும்.

தமது வீட்டுத் தோட்டத்தில் அலங்காரத்திற்காக மூலிகைத் தோட்டத்தினை அமைப்பதினால், பயிர்கள் பாதுகாக்கப்படுவதுடன், உள்ளத்திற்கும் உடலிற்கும் புதிய உத்வேகத்தினை வழங்கி மனிதனை நோயற்ற நபராக மாற்றுவதற்கு உதவும். நெற் பயிர்ச் செய்கையின் போதும் இரசாயனப் பொருட்களைப் பயன்படுத்தாது, எமது முன்னோர் பயன்படுத்திய பயிர்ச்செய்கை முறைகளைப் பின்பற்றினால் விஷமின்றிய உணவினைப் பெற்றுக்கொள்ள முடிவதோடு, நீண்ட ஆயுளையும் பெற்றுக்கொண்டு நோயற்ற சமூகமொன்றினை உருவாக்க முடியும்.

முழு உலகமும் ஒரு கிராமமாக மாறியுள்ள இந்த யுகத்தில் மனிதனின் நிலைத்திருப்பு ஒரு விஸ்வகர்ம காரியமல்ல என்பதினை மனிதனாகிய ஒ்வவொருவரும் உணருவார்களாயின், மீண்டும் மனிதர்களிலான உலகத்தினை பிறப்பிக்க முடியும் என்பது நம்பிக்கையாகும். அந்த புதிய உலகம் ஆயுர்வேதத்தின் ஊடாக மலரட்டும் என்பதே எனது பிரார்த்தனையாகும்.

பண்டு பண்டாரநாயக்க
சுதேச மருத்துவதறை பிரதி அமைச்சர்

# செயலாளரின் செய்தி



வாழ்க்கை பற்றிய விஞ்ஞானமாக அறிமுகப்படுத்தக்கூடிய ஆயுர்வேதமானது, மிகப்பழைமையான நாகரீகங்களில் இருந்து தற்போது வரை அனைத்து உயிர்களுக்கும் ஆராக்கியத்தினை வழங்கும் சாத்திரமாகும். மனிதன் எங்கே, எப்போது, உலகில் பிறந்தனோ அன்றிலிருந்து இன்றுவரை இயற்கை தர்ம நியதிகளின்படியே அவனது வாழ்கையை கொண்டு நடாத்தப்படுகின்றது.. நித்தமும் பிரச்சனைகளில் காலத்தினைக் கடக்கும் நாம் இலங்கைப் பிரஜைகளாக இருந்த, பழங்காலத்தில் இருந்தே போசணை மிக்க உணவுகளைப் பயன்படுத்துவதில் மட்டுமன்றி, தமது உடல் ஆரோக்கியத்தினையும் பேணும் முறைகளையும் அறிந்து வைத்திருந்தனர்.

காலமாற்றத்திற்கேற்ப உலகத்துடன் மேற்கொண்ட தொடர்புகளினால், ஏற்றபட்ட உறவுகளினால் சிங்கள மருத்துவ சாத்திரம், அந்நததந்த நாடுகளில் இருந்து பெற்றுக்கொண்ட அறிவினையம் சேர்த்து வளர்ச்சி அடைந்தது. அதாவது இந்தியாவில் இருந்து பெற்றுக்கொண்ட சித்த வைத்தியம், அரேபியாவில் இருந்து பெற்றுக்கொண்ட யுனானி வைத்தியம், மேற்குலக நாடுகளில் இருந்து பெற்றுக்கொண்ட ஹோமியோபதி என்பன அந்த நாடுகளுக்கே உரித்தான சிறப்புகளுடன் எமது சுதேச வைத்திய முறையினை போசித்தது.

சுதேச வைத்திய முறை மறைந்து போவதற்கு காரணமாக அமைந்தது கைத்தொழில் புரட்சியினால் மக்களின் வாழ்கை முறை சிக்கலடைந்ததாகும். உலகின் இயந்திரமயமாக்கலின் விளைவை மக்கள் உணர்ந்து கொண்டதனால் மீண்டும் அவர்கள் இயற்கை ஆரோக்கிய முறைகளுக்கு, சுதேச வைத்திய முறைகளுக்கு செல்வதற்கு வழிவகுக்கின்றது.

சுதேச மருத்துவத்துறை அமைச்சு, சுதேச வைத்திய முறையினை பேணுவதற்காக, சிங்கள மருந்துகள் மற்றும் அவற்றின் குணம் என்பன பற்றிய அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள், மூலிகை வளர்ப்புக் கருத்திட்டங்கள் மூலம் மூலிகை வளர்ப்பினை அபிவிருத்தி செய்தல், கொரியாவின் அக்கியூபங்சர் சிகிட்சை முறை, யோகா கல்வி போன்ற புதிய பிரிவுகளில் தனது கவனத்தினை செலுத்துகின்றது.

இந்த அமைச்சின் முக்கிய குறிக்கோளாக விளங்குவது, எதிர்கால சந்ததியினருக்கு இந்த சுதேச வைத்திய முறையினை மேலும் தரமாக்கி வழங்குவதாகும். இது பொருளாதார விளைவினை மட்டும் பெற்றுத்தருவதல்ல, சமூகத்தின் மற்றும் கலாச்சாரத்தின் அபிவிருத்திக்கு உறுதுணையாகும் ஒரு செயலாகும்.

அதனால் ஆயுர்வேத திணைக்களம் மற்றம் அதன் உப நிறுவனங்களின் நடவடிக்கையோடு இணைந்து, பாரம்பரிய ஔதட முறைகள் மற்றும் மூலிகை அறிவு என்பவற்றினை காப்பதற்கும், அவற்றினை எதிர்கால சந்நதியினருக்கு வழங்குவதற்கும், மிகச்சிறந்த தரமுள்ள சிகிட்சை சேவையினை வழங்குவதற்கும் எண்ணியதனால் மூலிகைப் பாவனை மற்றும் அதன் விளைவுகள் பற்றி புதிய ஆராய்ச்சிகள், ஆயுவுகள் என்பவற்றினை ஆரம்பிப்பதற்கும் சர்வதேச தரத்திற்கேற்ப மருந்துகளை சர்வதேசத்திற்கு தெரியப்படுத்துவதற்குமாக புதிய கருத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

காலத்திற்கு காலம் அழிவடைந்தும் மீண்டும் வளர்ச்சி அடைந்தும் வரும் சிங்கள மருத்துவ முறையினைப் பேணுவதற்காகவும், இலங்கை ஜனாதிபதியின் மகிந்த சிந்தனையின் எதிர்கால நோக்கினை அடைவதற்காகவும் சிங்கள மருத்துவத்தினை நாடு முழுவதிலும் மட்டுமல்லாது உலகமெங்கும் பரப்புவதற்காக தயாரிக்கப்பட்ட வரவுசெலவுத்திட்ட அறிக்கை இதன் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்றது.

லலித் கன்னங்கர,

செயலாளர்

சுதேச மருத்துவத்துறை அமைச்சு

## தோலை நோக்கு

சுதேச மருத்துவம் மூலம் அனைவருக்கும் சுகநலம

## அரும்பண

சுதேச மருத்துவ முறைமைகளில் தொழில் வாண்மை சிறப்பம்சங்களை உள்வாங்கி இலங்கை மக்களின் சமூக, பொருளாதார, உள மற்றும் ஆன்மீக நல்லிருப்பில் பங்கெடுத்து மேலான வாழ்க்கைத தரத்தை ஏற்படுத்தல்.

# பொருளடக்கம்


| | |
|---|---|
| முகவுரை | 8 |
| அமைச்சின் முன்னுரிமைச் செயற்பாடுகள் | 10 |
| விசேட நோக்கம் | 12 |
| சுதேச மருத்துவத்துறை அமைச்சின் பணிக்குழு | 24 |
| அமைச்சின் ஒழுங்கமைப்பு வரைபடம் | 25 |
| சுதேச மருத்துவத்துறை அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள் | 26 |
| சுதேச மருத்துவத்துறை அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படும் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் | 27 |
| ஆயுர்வேத நோயாளர்களின் புள்ளிவிபரங்கள் | 46 |
| சுதேச மருத்துவத்துறை அமைச்சு மற்றும் ஆயுர்வேத திணைக்களத்தின் செலவு அறிக்கை | 51 |

# 01.அறிமுகம்

சுதேசிய வைத்திய முறையின் வரலாறு, சிங்கள இனத்தின் ஆரம்பத்தினைப் போன்றே மிகப்பழமையானது. இலங்கைக்கே உரிய பாரம்பரிய வைத்திய முறையான இது நடைமுறையில் உள்ள பாரம்பரிய அறிவை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இம்முறைமையானது வட இந்தியாவிலிருந்து பெற்றுக்கொண்ட ஆயுர்வேதம், தென் இந்தியாவிலிருந்து பெற்றுக்கொண்ட சித்த மருத்துவம் மற்றும் அராபியாவிலிருந்து பெற்றுக்கொண்ட யுனானி முறை ஆகியவற்றால் போசிக்கப்பட்டுள்ளது.

இலங்கை காலனித்துவ நாடாக இருந்த காலத்தில் பல்வேறு காரணங்களால் சுதேச மருத்துவ துறையும் ஆயுர்வேதமும் வீழ்ச்சி கண்டதோடு, அதன் விளைவாக மேலைத்தேய மருத்துவ முறைமை நாடெங்கிலும் பரவியது.

எனினும் இலங்கை அரசாங்கங்கள் பாரம்பரிய மருத்துவம் மற்றும் ஆயுர்வேத முறைமையின் எழுச்சிக்காக பிரத்தியேகமான திணைக்களமொன்றை அமைச்சின் கீழ் நிறுவியதன் காரணமாக இம்மருத்துவ முறைமையின் இருப்பை பாதுகாக்க முடிந்தது. சுகாதார அமைச்சானது சுகாதார மற்றும் சுதேச மருத்தவத்துறை அமைச்சாக மாற்றம் பெற்றதோடு 1980 ஆண்டு சுதேச மருத்தவத்துறை அமைச்சு தனியானதொரு அமைச்சாக நிறுவப்பட்டது. இன்று இந்த அமைச்சு அமைச்சரவை அமைச்சர் ஒருவரையும் பிரதி அமைச்சர் ஒருவரையும் கொண்டுள்ளது. இந்த அமைச்சினூடாக சுதேச மருத்துவ முறைமையை பாதுகாத்து மேம்படுத்துவதனூடாக மக்களுக்கு உன்னதமான சேவையை வழங்க எதிர்பார்க்கப்படுகிறது. சுதேசிய வைத்திய முறையின் மூலம் நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்பினை வழங்குவதற்கு ஏற்றவகையில் சுகாதார வளம்மிக்க சுபீட்சமுடைய மக்களை உருவாக்குவதற்காக சுதேசிய வைத்திய அமைச்சானாது விசேட பணிகளை மேற்கொள்ளுகின்றது.

தற்போது நாடெங்கிலும் சுதேசிய மருத்துவ முறை பரவியுள்ளதுடன், அனேகமானோர் இம்முறையின் கீழ் சிகிட்சை பெறுவதற்கு விரும்புவதனைக் காணமுடிகின்றது. அத்தோடு தரமான ஔதட உற்பத்திகளின் மூலம் ஏனைய நாடுகளுக்கும் சுதேச வைத்திய முறையினை பரப்புவதற்கு முடிந்துள்ளமை நாம் பெற்றுள்ள வெற்றியாகும். சுதேசிய வைத்திய முறையினை பாதுகாத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் மூலம் மக்களின் நலத்தினை பேணுதல் அமைச்சின் பிரதான நோக்கமாகும்.

**"உலகத்திற்கு பெருமையுடன் வழங்கக்கூடிய சுதேச வைத்திய முறையொன்று எம்மிடம் உள்ளது. இந்த அறிவினை பாதுகாத்து முழு உலகத்திற்கும் பகிர்ந்தளிப்பதே காலம் எனக்கிட்ட கட்டளையாகக் கருதுகின்றேன்."** ஏன மகிந்த சிந்தனை வாக்கியத்தினை உண்மையாக்குவதற்கு கீழ்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது.

(1) ஆரோக்கியமான தேசமொன்றை உருவாக்குவதற்காக சுதேச மற்றும் ஹோமியோபதி வைத்திய முறைகளைப் பயன்படுத்தல்.

(2) சுதேச மருத்துவ முறைமையை பாதுகாத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல்.

(3) சுதேசிய மூலிகை வளர்ப்பை பரந்தளவில் செயற்படுத்துவதன் மூலம் மருந்து உற்பத்தியை அதிகரித்தல்.

(4) பாதுகாப்பான ஆயுர்வேத மருத்துவ முறைமையை உருவாக்குவதன் மூலம் சுற்றுலாக் கைத்தொழிலை
விருத்தி செய்து அதன் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்தல்.

(5) ஹோமியோபதி மருத்துவ முறைமையை மேம்படுத்தல்.

இதுவரை நாடெங்கிலும் 62 ஆயுர்வேத வைத்தியசாலைகளும், 208 மருந்துச்சாலைகளும் நிறுவப்பட்டுள்ளதோடு, இவற்றிலிருந்து வருடத்திற்கு 3 மில்லியனுக்கும் அதிகமான வெளி நோயாளர்களும், 25000ற்கு மேற்பட்ட தங்கியிருந்து சிகிட்சை பெறுவோரும் சேவையினைப் பெற்றுக்கொள்கின்றனர். தற்போது 1424 அரச ஆயுர்வேத மருத்துவர்கள் சேவையில் ஈடுபட்டுள்ளனர். மாகாண சபைகளின் கீழ் உள்ள 250 சுதந்திர ஆயுர்வேத மருந்தகங்களின் மூலம் சிகிட்சை அளிக்கப்படுவதுடன், அவற்றின் நிர்வாகம் மாகாண சபைகளுக்கு சாட்டப்பட்டுள்ள போதும், அவற்றிற்கான மருந்துகள் வழங்குவதற்கான பொறுப்புகள் சுதேச மருத்துவத்துறை அமைச்சுக்கும், ஆயுர்வேத திணைக்களத்திற்கும் சாட்டப்பட்டுள்ளது. நாட்டில் உள்ள மொத்த சனத்தொகையினைக் கருத்தில் கொண்டால், அதில் 20.87 மில்லயன் மக்கள், அதாவது 11 சதவீதத்தினர் இலவச அரச ஆயுர்வேத மருத்துவ சேவையினைப் பெறறுக்கொள்வதோடு, மேலும் அதிகமானோர் தனியார் ஆயுர்வேத வைத்தியசாலைகளிலும் மற்றும் மருந்தகங்களிலும், பரம்பரை வைத்தியர்களிடமும் சேவையினைப் பெற்றுக்கொள்கின்றனர். 2011ஆம் ஆண்டு ஹொமியோபதி சிகிட்சை முறையினை நம்பி, அரச ஹோமியோபதி வைத்தியசாலைக்கு வந்த நோயாளர்களின் எண்ணிக்கை 24,011ஆகும்.

ஆயுர்வேத வைத்திய சபையில் சுதேசிய வைத்தியதுறைக்கு 2011.12.31 திகதி வரையில் பதிவுசெய்த வைத்தியர்களின் எண்ணிக்கை 20353ஆகும். இதில் பட்டதாரிகள், டிப்ளோமாதாரிகள், அனைத்துப் பகுதிகளுக்குமான பரம்பரை வைத்தியர், விசேட பரம்பரை வைத்தியர்கள் என்போர் இதில் அடங்குவர்.

எங்கள் சேவையைப் பெற்றுக்கொள்பவர்களுக்கு சிறந்த சேவையினை வழங்குவதற்காக கீழ்வரும் நிறுவனங்கள் செயற்படுத்தப்படுகின்றது.

1. ஆயுர்வேத திணைக்களம்
2. ஆயுர்வேத வைத்திய சபை
3. பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனம்
4. சுதேசிய வைத்திய முறை பற்றிய தேசிய நிறுவனம்
5. ஆயுர்வேத வைத்தியசாலை மற்றும் மருந்தகங்கள்
6. மூலிகைத் தோட்டங்கள்
7. இலங்கை ஆயுர்வேத ஔதட கூட்டுத்தாபனம்
8. ஹோமியோபதி வைத்திய சபை
9. வெலிசர ஹோமயோபதி வைத்தியசாலை மற்றும் சிகிட்சை நிலையம்
10. ஆயுர்வேத சமூக சுகாதார மேம்படுத்தல் காரியாலயம் - அனுராதபுரம்

# 02. அமைச்சின் முன்னுரிமைச் செயற்பாடுகள்

| விசேட கவனத்திற்குள்ளான முன்னுரிமை வழங்கும் பிரிவுகள் | பெறுபேறு அடைவுகளின் குறிகாட்டிகள் |
|---|---|
| 1. சுதேச மருத்துவ முறைமை தொடர்பான சட்ட வரம்பை வலுவாக்குதல். | ஆயுர்வேத மருத்துவ முறைமைப் பாவனையில் உள்ள முறைகேடுகளைக் கட்டுப்படுத்தல்.<br><br>தொழில் ரீதியில் திருப்தியான ஆயுர்வேத மருத்துவர்களை உருவாக்குதல்.<br><br>ஆயுர்வேத சிகிட்சை நிறுவனங்களை சட்ட ரீதியான அடிப்படையின் கீழ் வலுவாக்குதல் |
| 2. ஆயுர்வேத ஆராய்ச்சிகளை வலுவாக்குதல் மற்றும் விருத்தி செய்தல். | தரமுடைய புதிய ஆயுர்வேத உற்பத்திகளின் எண்ணிக்கையினை அதிகரித்தல்.<br><br>ஆயுர்வேத ஆராய்ச்சியாளர்களின் உரிமைகளை உறுதிப்படுத்தல்.<br><br>ஆயுர்வேத மருத்துவ முறையின் அங்கீகரிப்பை அதிகரித்தல்<br><br>ஆயுர்வேத ஆராய்ச்சிகள், ஆராய்ச்சியாளர்களுக்கு அதிக வாய்ப்பளித்தல்.<br><br>பேணப்பட்டுவரும் பாரம்பரிய ஆயுர்வேத ஆவணங்களை அதிகரித்தல்.<br><br>ஆயுர்வேதத்துடன் தொடர்புடைய புலமைச் சொத்துரிமையை ஒழுங்குமுறைப்படுத்தல். |
| 3. ஆயுர்வேதத்திற்கு தகவல் தொழில் நுட்பத்தை பயன்படுத்துதல். | இற்றைப்படுத்தப்பட்ட தகவல் தொகுதியை உருவாக்கல்<br><br>முறையான வலைப்பின்னல் தொகுதியை உருவாக்கல்<br><br>ஈ-ஆயுர்வேத மருத்துவ முறைமை<br>ஆயுர்வேத வைத்திய முறையினை விரிவுபடுத்தல் |
| 4. ஆயுர்வேத சுகாதார பாதுகாப்பை இற்றைப்படுத்தி மேம்படுத்துவதற்காக மனிதவள அபிவிருத்தியினை மேற்கொள்ளல் | தரமுடைய மனித வளங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்.<br><br>தொழில் ரீதியாக திருப்தியான மனிதவளத்தினை அதிகரித்தல்.<br><br>சுதேசிய மருத்துவ முறைக்கு உலகளாவிய ரீதியில் உள்ள கேள்விகளை பூர்த்தி செய்வதற்கு இயலுமாதல்.<br>பாரம்பரிய மருத்துவர்களுக்கு உள்ள அறிவு மற்றும் திறனை சமூகத்திற்கு பயன்படும் வகையில் இற்றைப்படுத்தல்.<br><br>திறமை உடைய சுதேசிய வைத்தியர்களின் |

| | |
|---|---|
| | எண்ணிக்கையை அதிகதித்தல்.<br><br>அரச மற்றும் தனியார் பிரிவுகளில் ஆயுர்வேத முறைகளைப் பயன்படுத்துபவர்களின் அறிவு, எண்ணக்கரு மற்றும் திறமையினை மேம்படுத்தல் |
| 5. ஆயுர்வேத மூலிகை உற்பத்தியை ஊக்குவித்தல் மற்றம் மூலிகைச் செடி வளர்ப்பை அதிகரித்தல் மற்றும் மூலிகைத் தோட்டங்களை ஆரம்பித்தல். | உயர்த்தினை உடைய சிறந்த குணமுடைய மருந்துகளின் எண்ணிக்கையினை அதிகரித்தல்.<br><br>ஆயுர்வேதம் மூலமாக வருமான பிறப்பாக்கம் அதிகரித்தல்.<br><br>ஆயுர்வேத மூலிகைகளுக்கான வெளிநாட்டு சந்தை வாய்ப்பு அதிகரித்தல்.<br><br>பயன்பாட்டுக்கு இலகுவான மருந்துகளின் உற்பத்தி உயர்வடைதல். |
| 6. ஆயுர்வேதத்தை வணிகமயமாக்கலுக்கு அமையப் பேணுதல் | பாரம்பரிய மருத்துவம், ஆயுர்வேதம், சித்த மற்றும் யுனானி மருத்துவ முறைமைகளை சர்வதேச அளவில் பிரசித்தம் அடைந்திருத்தல்.<br><br>விசேடமான ஆயுர்வேத சிகிச்சை முறைகளை வழங்கக் கூடிய புதிய வசதிகளை உடைய வாட்டுக்கள் உடைய வைத்தியசாலைகள் உருவாதல்.<br><br>இருக்கும் மூலிகை தோட்டங்கள் மற்றும் புதிய மூலிகைத் தோட்டங்கள் சிறந்த முறையில் காணப்படல். |
| 7. ஹோமியோபதி மருத்துவ முறைமையின் பயன்பாட்டை அதிகரித்தல். | ஹோமியோபதி மருத்துவ முறைகளைப் பயன்படுத்தும் நிறுவனங்களை ஒழுங்குமுறையில் நிறுவுதல்.<br><br>தொழில் ரீதியாக திருப்திகரமான ஹோமியோபதி மனித வளம் உருவாதல். |

விசேட இணைப்பு 01

1. தேசிய வைத்திய விடயத்திற்கு உரிய சட்ட ஒழுங்குவிதிகளை மீளப்புதுப்பித்தல்

| நோக்கம், முறைகள் மற்றும் செயற்பாடு | | | காலச் சட்டம் | | | | | | | | | | பொறுப்பு | செயலாற்றுகை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நோக்கம் | முறைகள் | செயற்பாடு | ஆடிப்படை ஆண்டு | 2013 | | | | 2014 | 2015 | 2016 | 2017 | எதிர்காலத்தில் செயற்படும் | | |
| | | | | Q1 | Q2 | Q3 | Q4 | | | | | | | |
| ஆயுர்வேதம் எனும் பெயரில் மேற்கொண்ணப் படும் முறைகேடுகளை இல்லாது ஒழித்தல் | சட்டத்தைத் திருத்துதல் | சட்டத்தை அமுல்படுத்தல் | 2011 | x | x | x | x | x | | | | | மேலதிகச் செயலாளர் அபிவிருத்தி<br>ஆயுர். ஆணையாளர்<br>பணிப்பாளர் திட்டமிடல்<br>மாகாண ஆயுர். ஆணையாளர் | முன்வரைவுக் காலம் |
| திருப்தியான ஆயுர்வேத வைத்தியர்களை உருவாக்குதல் | சேவைப் பிரமாணத் திருத்தம் | சேவைப் பிரமாண அமுலாக்கல் | 2011 | x | x | x | x | | | | | | மேலதிகச் செயலாளர் நிர்வாகம்<br>சி.உ.செயலர்<br>ஆயுர். ஆணையாளர்<br>மாகாண ஆயுர். ஆணையாளர் | அனுமதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| சட்ட ரீதியான தனியார் ஆயுர்வேத நிறுவனங்கள் உருவாதல் | பிரமாணங்களைத் தயாரித்தல் மற்றும் திருத்தங்களை மேற்கொள்ளல் | பிரமாணங்களை செயற்படுத்துதல் | 2011 | x | x | x | x | x | x | x | x | x | மேலதிகச் செயலாளர் அபிவிருத்தி<br>ஆயுர். ஆணையாளர்<br>பணிப்பாளர் திட்டமிடல் | முன்வரைவுக் காலம் |

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | மாகாண ஆயுர். ஆணையாளர் | |

விசேட இணைப்பு 02

2. ஆயுர்வேத, சித்த, யுனானி வைத்திய முறைகளை ஊக்குவித்தல்

| நோக்கம், முறைகள் மற்றும் செயற்பாடு | | | காலச் சட்டம் | | | | | | | | | | பொறுப்பு | செயலாற்றுகை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நோக்கம், | முறைகள் | செயற்பாடு | அடிப்படை ஆண்டு | 2013 | | | | 2014 | 2015 | 2016 | 2017 | எதிர்காலத்தில் செயற்படும். | | |
| | | | | Q1 | Q2 | Q3 | Q4 | | | | | | | |
| நாட்பட்ட நோய்களுக்கான சிகிட்சை முறையை மேம்படுத்தல் | பௌதீக வளங்களை மேம்படுத்தல், வைத்தியர்களின் திறமையினை விருத்தி செய்தல், ஆய்வு நடவடிக்கைகளைய மேம்படுத்தல், நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தல். | போதனா வைத்தியசாலைகளில் புதிய கட்டடங்களை நிர்மாணித்தல், நவீன பொறிகளையும் உபகரணங்களையும் வழங்குதல், பயிற்சி மற்றும் தகைமையை மேம்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குதல். | 2011 | x | x | x | x | x | x | x | x | x | மேலதிகச் செயலாளர் அபிவிருத்தி<br><br>ஆயுர். ஆணையாளர்<br><br>பணிப்பாளர் திட்டமிடல்<br><br>பணிப்பாளர் வைத்தியசாலை<br><br>மாகாண ஆயுர். ஆணையாளர் | தொடர்ச்சியான மதிப்பீடு மற்றும் பின்தரவு பெற்றுக்கொள்ளல் |
| பரவும் மற்றும் பரவாத நோய்களைக் கட்டுப்படுத்தல் | சமூகச் சுகாதார சேவையினை விரிவுபடுத்தல் | போசணை நிகழ்ச்சித்திட்டம், அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டம் சிகிட்சை முகாம் | 2011 | x | x | x | x | x | x | x | x | x | மேலதிகச் செயலாளர் அபிவிருத்தி<br><br>ஆயுர். ஆணையாளர்<br><br>பணிப்பாளர் திட்டமிடல்<br><br>பணிப்பாளர் | தொடர்ச்சியான மதிப்பீடு மற்றும் பின்தரவு பெற்றுக்கொள்ளல் |

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | சமூகச் சுகாதாரம்<br><br>மாகாண ஆயுர். ஆணையாளர் | |
| பாதுகாப்பான பாரம்பரிய ஆயுர்வேதபா வனையாளர் களை உருவாக்கல் | பாரம்பரிய வைத்தியர்களு க்கான வசதிகளை மேம்படுத்தல். திறமை அபிவிருத்தி. செய்தல் மற்றும் மேம்படுத்தல் | பாரம்பரிய வைத்திய முறை ஒய்வூதிள முறை ஏட்டுச் சுவடிகள் மற்றும் பழைய அளவுக் குறிப்புகள் என்பவற்றை பாதுகாத்தல் | 2011 | x | x | x | x | x | x | x | x | x | மேலதிகச் செயலாளர் அபிவிருத்தி<br><br>ஆயுர். ஆணையாளர்<br><br>பணிப்பாளர் திட்டமிடல்<br><br>சுவடிகள் வைத்திய சபை<br><br>மாகாண ஆயுர். ஆணையாளர் | தொடர்ச்சியனா மதிப்பீடு மற்றும் பின்தரவு பெற்றுக்கொள் ளல் |

விசேட இணைப்பு 03

3. ஆயுர்வேத ஆராச்சிகளை மேம்படுத்தல்

| நோக்கம், முறைகள் மற்றும் செயற்பாடு: நோக்கம், | முறைகள் | செயற்பாடு | காலச் சட்டம்: அடிப்படை ஆண்டு | 2013 Q1 | 2013 Q2 | 2013 Q3 | 2013 Q4 | 2014 | 2015 | 2016 | 2017 | எதிர்காலத்தில் செயற்படும். | பொறுப்பு: நோக்கம், | செயலாற்றுகை: முறைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாட்பட்ட நோய்கள் மற்றும் பரவும் நோய்களுக்காக புதிய ஆயுர்வேத மருந்துகளை உற்பத்தி செய்தல் | ஆய்வுகூடத்தினை மீள்கட்டமைப்பு செய்தல். ஆய்வாளர்களின் அறிவு மற்றும் திறமையினை மேம்படுத்தலுக்கு அவசியமான வசதிகளை வழங்குதல். | ஆய்வுகூடத்தினை சுயாதீன நிறுவனமாக்குதல். ஆய்வாளர்களின் பட்டப்பின்கற்கைநெறிகள் மற்றும் பயிற்சிபகளுக்கான வசதிகளை மேம்படுத்தல். ஆராய்ச்சிகளுக்கு அவசியமாக வசதிகளை வழங்குதல். | 2011 | x | x | x | x | x | x | x | x | x | மேலதிகச் செயலாளர் அபிவிருத்தி<br>ஆயுர். ஆணையாளர்<br>பணிப்பாளர் திட்டமிடல்<br>பணிப்பாளர் ஆய்வுகூடம் | தொடர்ச்சியான மதிப்பீடு மற்றும் பின்தரவு பெற்றுக்கொள்ளல் |
| ஆயுர்வேத ஆய்வுகூடத்தின் கீழ் உள்ள உரிமைகளைப் பாதுகாத்தல். | சட்ட ரீதியான தேவைகளை திருத்துதல். | புலமைச் சொத்து உரிமையைப் பெற்றுக்கொடுத்தல். பாரம்பரிய அறிவினைப் பாதுகாத்தலுக்காக இலக்கமுறை நூலக முறைமையினை அறிமுகப்படுத்தல். (Digital library) | 2011 | x | x | x | x | x | x | x | x | x | மேலதிகச் செயலாளர் அபிவிருத்தி<br>ஆயுர். ஆணையாளர்<br>பணிப்பாளர் திட்டமிடல்<br>பணிப்பாளர் ஆய்வுகூடம் | தொடர்ச்சியான மதிப்பீடு மற்றும் பின்தரவு பெற்றுக்கொள்ளல் |

விசேட இணைப்பு 04

4. ஆயுர்வேத மூலிகைகளின் உற்பத்தியை உயர்த்துதல் மற்றும் மூலினை வளர்ப்பை அதிகரித்தல்

| நோக்கம், முறைகள் மற்றும் செயற்பாடு | | | காலச் சட்டம் | | | | | | | | | | பொறுப்பு | செயலாற்றுகை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நோக்கம், | முறைகள் | செயற்பாடு | அடிப்படை ஆண்டு | 2013 | | | | 2014 | 2015 | 2016 | 2017 | எதிர்காலத்தில் செயற்படும். | நோக்கம், | முறைகள் |
| | | | | Q1 | Q2 | Q3 | Q4 | | | | | | | |
| மூலினைச் செடிகளைப் பற்றிய அறிவுள்ளசமூகத்தினை உருவாக்குதல். | உரியவர்களை அறிவூட்டுதல் மற்றும் செயற்பாடுகளுக்கு பங்குபற்றச் செய்தல். | புடசாலை மூலிகைத் தோட்ட நிகழ்ச்சித்திட்டம், விகாரையில் இருந்து கிராமத்திற்கு நிகழ்ச்சித்திட்டம், சிறைச்சாலை நிகழ்ச்சித்திட்டம், இராணுவ முகாம் நிகழ்ச்சித்திட்டம், திவி நகும நிகழ்ச்சித்திட்டத்திற்கு பங்களிப்பினை வழங்குதல். | 2011 | x | x | x | x | x | x | x | x | x | மேலதிகச் செயலாளர் அபிவிருத்தி<br><br>ஆயுர். ஆணையாளர்<br><br>பணிப்பாளர் திட்டமிடல்<br><br>பணிப்பாளர் ஆய்வுகூடம் | தொடர்ச்சியனா மதிப்பீடு மற்றும் பின்தரவு பெற்றுக்கொள்ளல் |
| ஆராய்ச்சி மூலம் தரத்தில் உயர்ந்த பிரபல்யாமான மருந்துகளை உற்பத்தி செய்வதற்காக உயர்தரமுடைய மூலிகைச் | அரச மற்றும் தனியார் ஒன்றிணைந்த நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துதல். உரிய மூலிகை பயிர்ச் செய்கை கருத்திட்டத்தின் | மூலிகை விவசாய நிறுவனம், இளைஞர் மூலிகை விவசாய நிகழ்ச்சித்திட்டம், களஞ்சியப்படுத்தல் மற்றும் உற்பத்தி வசதிகளை மேம்படுத்தல். | 2011 | x | x | x | x | x | x | x | x | x | மேலதிகச் செயலாளர் அபிவிருத்தி<br><br>ஆயுர். ஆணையாளர்<br><br>பணிப்பாளர் திட்டமிடல்<br><br>பணிப்பாளர் ஆய்வுகூடம் | தொடர்ச்சியனா மதிப்பீடு மற்றும் பின்தரவு பெற்றுக்கொள்ளல் |

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| செடிகள் கிடைக்கக்கூடிய நிலைமையை உருவாக்கல். | தரத்தினை மேம்படுத்தல். | அரச வசமுள்ள மூலிகைத் தோட்டங்களின் அபிவிருத்தி, ஆயுர்வேத வைத்தியசாலைகளில் உற்பத்தி நடவடிக்கைகளை விருத்தி செய்தல். | | | | | | | | | | | தலைவர்<br>ஆயுர்.<br>கூட்டுத்தாபனம். | |
| பயிர்செய்கையாளர்களின் வருமாகத்தை அதிகரித்தல். | ஒழுங்கமைக்கப்பட்ட சந்தை முறையினை அறிமுகப்படுத்தல். | கூட்டுத்தாபனம் மற்றும் வைத்தியசாலைகளின் கொள்வனவை தொடர்பு படுத்தல் மாகாண மட்டத்தில் மத்தியநிலையங்களை உருவாக்குதல். தனியார்துறையினருமான தொடர்புபடுத்தல். | 2011 | x | x | x | x | x | x | x | x | x | மேலதிகச் செயலாளர் அபிவிருத்தி<br><br>ஆயுர். ஆணையாளர்<br><br>பணிப்பாளர் திட்டமிடல்<br><br>பணிப்பாளர் ஆய்வு நிறுவனம் | தொடர்ச்சியனா மதிப்பீடு மற்றும் பின்தரவு பெற்றுக்கொள்ளல் |

விசேட இணைப்பு 05

5. ஆயுர்வேத வைத்திய முறையை மேம்படுத்துவதற்காக மனித வளத்தை மேம்படுத்தல்

| நோக்கம், முறைகள் மற்றும் செயற்பாடு | | | காலச் சட்டம் | | | | | | | | | | பொறுப்பு | செயலாற்றுகை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நோக்கம், | முறைகள் | செயற்பாடு | ஆடிப்படை ஆண்டு | 2013 | | | | 2014 | 2015 | 2016 | 2017 | எதிர்காலத்தில் செயற்படும். | நோக்கம், | முறைகள் |
| | | | | Q1 | Q2 | Q3 | Q4 | | | | | | | |
| திருப்தியான சேவையாளர் களை உருவாக்குதல் | மகிழ்ச்சியான காரியாலய சுற்றுச் சூழலை வழங்குதல். சேவையாளர் ஊக்குவிப்பு | உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல். புதிய தொழில்நுட்பக் கருவிகளை வழங்குதல். உற்பத்திததிறன் நிகழ்ச்சித்திட்டங் களைச் செயற்படுத்தல், திறமையினை மதிப்பிடுதல், ஊழியர்களுக்கான பதவியுயர்வு மற்றும் இடமாற்றங்கைளச் செயற்படுத்தல். | 2011 | x | x | x | x | x | x | x | x | x | மே.செயலாளர் நிர்வாகம்<br><br>சி. உ. செயலாளர் ஆயுர். ஆணையாளர்<br><br>மாகாண ஆயுர். ஆணையாளர் | தொடர்ச்சியனா மதிப்பீடு மற்றும் பின்தரவு பெற்றுக்கொள் ளல் |
| பாரம்பரிய வைத்தியர்களின் திறமை, அறிவு என்பவற்றை உறுதியாக அபிவிருத்தி செய்தல். | பரம்பரை வைத்தியர்களின் முகாமைத்துவம், சமூக சுகாதரா அலுவலர்களின் மற்றும் மூலினை மற்றும் உற்பத்தி அலுவலர்களின் பயிற்சி | புயிற்சியை வழங்குவதற்காக உயர் கல்வி வசதியைப் பெற்றுக் கொடுத்தல். அறிவு மட்டத்திற்கு அமைவாக அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழை வழங்குதல். | 2011 | x | x | x | x | x | x | x | x | x | மே.செயலாளர் நிர்வாகம்<br><br>சி. உ. செயலாளர்<br><br>ஆயுர். ஆணையாளர்<br><br>மாகாண ஆயுர். ஆணையாளர் | தொடர்ச்சியனா மதிப்பீடு மற்றும் பின்தரவு பெற்றுக்கொள் ளல் |

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வசதிகளை மேம்படுத்தல். | | | | | | | | | | | | | |
| மக்களுக்கு சிறந்த சேவையினை வழங்கக்கூடிய தொழில்சார் பிரிவினரை உருவாக்கல். | நிபுணத்துவம் மிக்க சிறந்த தொழிலாளர்களை ஆட்சேர்ப்பு செய்தல், பயிற்சி மற்றும் அபிவிருத்தி, எண்ணக்கருவினை மாற்றுதல். | பயிற்சிக்கு அனுப்புதல், உயர் கல்வி வசதிகளை வழங்குதல், அறிவின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழினை வழங்குதல். | 2011 | x | x | x | x | x | x | x | x | x | மே.செயலாளர் நிர்வாகம்<br><br>சி. உ. செயலாளர்<br><br>ஆயுர். ஆணையாளர்<br><br>மாகாண ஆயுர். ஆணையாளர் | தொடர்ச்சியான மதிப்பீடு மற்றும் பின்தரவு பெற்றுக்கொள்ளல் |

விசேட இணைப்பு 06

6. தகவல் தொழில்நுட்பத்தை ஆயுர்வேதத்தோடு இணைத்தல்

| நோக்கம், முறைகள் மற்றும் செயற்பாடு | | | காலச் சட்டம் | | | | | | | | | | பொறுப்பு | செயலாற்றுகை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நோக்கம், | முறைகள் | செயற்பாடு | அடிப்படை ஆண்டு | 2013 | | | | 2014 | 2015 | 2016 | 2017 | எதிர்காலத்தில் செயற்படும். | நோக்கம், | முறைகள் |
| | | | | Q1 | Q2 | Q3 | Q4 | | | | | | | |
| தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதன் மூலம் மக்களுக்கு தகவல்களை வழங்குதல். | இணையத்தளம், மின்னஞ்சல், ∴பேஸ் புக் பயன்பாடு | இணையத்தளத்தினை இற்றைப்படுத்தல். மின்னஞ்சல் சேவை மூலம் தகவல்களை வழங்குதல். வைத்தியர்களின் விபரங்களை இணைத்தில் சேர்த்தல் | 2011 | x | x | x | x | x | x | x | x | x | மேலதிகச் செயலாளர் அபிவிருத்தி<br><br>தகவல் தொழில்நுட்ப அலுவலர் | தொடர்ச்சியான மதிப்பீடு மற்றும் பின்தரவு பெற்றுக்கொள்ளல் |

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஈ-ஹெல்த் வசதி | ஈ -சனல் சேவை | உரிய இணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். | 2011 | x | x | x | x | x | x | x | x | x | மேலதிகச் செயலாளர் அபிவிருத்தி<br><br>தகவல் தொழில்நுட்ப அலுவலர் | தொடர்ச்சியனா மதிப்பீடு மற்றும் பின்தரவு பெற்றுக்கொள் ளல் |

விசேட இணைப்பு 07

7. ஆயுர்வேதத்தை வணிகமயப்படுத்தல்

| நோக்கம், முறைகள் மற்றும் செயற்பாடு | | | காலச் சட்டம் | | | | | | | | | பொறுப்பு | செயலாற்றுகை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நோக்கம், | முறைகள் | செயற்பாடு | ஆடிப்படை ஆண்டு | 2013 | | | | 2014 | 2015 | 2016 | 2017 | எதிர்காலத்தில் செயற்படும். | நோக்கம், | முறைகள் |
| | | | | Q1 | Q2 | Q3 | Q4 | | | | | | | |
| தேசிய பொருளாதாரத் தினை வலுவூட்டுதல். | சுற்றுலாக்கு கவர்ந்திழுப்ப தற்கான நடவடிக்கை கள். அரச மற்றும் நிறுவனங்கள் ஒன்றிணைந் த வணிக நிகழ்ச்சித்தி ட்டங்களை செயற்படுத்து தல். ஆயுர்வேத உற்பத்தி மற்றும் மூலப் பொருட்களை வணிக மட்டத்திற்கு உயர்த்துதல் , தரமான ஆயுர்வேத சேவையினை | ஆயுர்வேத சுற்றுலா மையம் ஒன்றினை நிறுவுதல். சுற்றுலா ஹொட்டல் சார்ந்த ஆயுர்வேத சிகிட்சைம த்தியநிலையங் களின் அபிவிருத்தி, ஆயுர்வேத ஆயுர்வேத வைத்தியசாலைகளினுள் கட்டண வாட்டுக்களை உருவாக்குதல். கவர்சியான மூலிகைத் தோட்டங்களை உருவாக்குதல். | 2011 | x | x | x | x | x | x | x | x | x | மேலதிகச் செயலாளர் அபிவிருத்தி<br><br>ஆயுர். ஆணையாளர்<br><br>பணிப்பாளர் திட்டமிடல்<br><br>மாகாண ஆயுர். ஆணையாளர்<br><br>பணிப்பாளர் ஆய்வுகூடம் | தொடர்ச்சியனா மதிப்பீடு மற்றும் பின்தரவு பெற்றுக்கொள் ளல் |

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வழங்குதல். | ஆயுர்வேதம் பற்றிய கற்கைகள் மற்றும் ஆராய்ச்சிகளுக்கு அவசியமான வசதிகளை வழங்குதல். | | | | | | | | | | | | |

விசேட இணைப்பு 08

8. ஹோமியோபதி வைத்திய முறை

| நோக்கம், முறைகள் மற்றும் செயற்பாடு | | | காலச் சட்டம் | | | | | | | | | | பொறுப்பு | செயலாற்றுகை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நோக்கம், | முறைகள் | செயற்பாடு | அடிப்படை ஆண்டு ஐ | 2013 | | | | 2014 | 2015 | 2016 | 2017 | எதிர்காலத்தில் செயற்படும். | நோக்கம், | முறைகள் |
| | | | | Q1 | Q2 | Q3 | Q4 | | | | | | | |
| ஹோமியோபதி வைத்திமுறையினை விரிவாக்கல் | தகைமையுடைய வைத்தியர்களை உருவாக்குதல், நிறுவன வசதிகளை மேம்படுத்தல். | ஹோமியோபதிப் பட்டப்படிப்பினைப் பெற்றுக்கொள்வதற்கான புலமைப்பரிசில்களை வழங்குதல், சிகிட்சை நிலையங்களின் எண்ணிக்கையினை அதிகரித்தல். | 2011 | x | x | x | x | x | x | x | x | x | மேலதிகச் செயலாளர் அபிவிருத்தி<br><br>மேலதிகச் செயலாளர் நிர்வாகம்<br><br>வைத்திய சபை<br><br>அ.பொ.வைத்திய அலுவலர் | தொடர்ச்சியனா மதிப்பீடு மற்றும் பின்தரவு பெற்றுக்கொள்ளல் |
| ஹோமியோபதி நிறுவனங்களை சிறந்த முறையில் நிறுவுதல். | வைத்திய சபையினை வலுவூட்டுதல். | மீள்கட்டமைப்பு செய்தல். | 2011 | x | x | x | x | x | - | - | - | - | மேலதிகச் செயலாளர் அபிவிருத்தி<br><br>மேலதிகச் செயலாளர் | தொடர்ச்சியனா மதிப்பீடு மற்றும் பின்தரவு பெற்றுக்கொள்ளல் |

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | நிர்வாகம்<br><br>வைத்திய சபை<br><br>அ.பொ.வைத்திய அலுவலர் | |
| திருப்பதியான ஹோமியோபதி மனித வளத்தினை உருவாக்குதல். | வைத்தியர்கள் மற்றும் அலுவலக ஊழியர்களுக்கான பயிற்சி. | பயிற்சி பாடநெறி அமைப்பு உயர் கல்விக்கான வசதிகளை வழங்குதல். | 2011 | x | x | x | x | x | x | x | x | x | மேலதிகச் செயலாளர் அபிவிருத்தி<br><br>மேலதிகச் செயலாளர் நிர்வாகம்<br><br>வைத்திய சபை<br><br>அ.பொ.வைத்திய அலுவலர் | தொடர்ச்சியான மதிப்பீடு மற்றும் பின்தரவு பெற்றுக்கொள்ளல் |

## சுதேசிய மருத்துவத்துறை அமைச்சின் பணிக்குழு (31.12.2012ம் திகதியில்)

| பதவி | உரிய சேவை | அனுமதி வழங்கப்பட்ட எண்ணிக்கை | தற்போது பணியாற்றுபவர்களின் எண்ணிக்கை | வெற்றிடம் |
|---|---|---|---|---|
| 1. செயலாளர் | - | 01 | 01 | - |
| 2. மேலதிகச் செயலாளர் (நிர்வாகம்) | SLAS (விசேட தரம்) | 01 | 01 | - |
| 3. மேலதிகச் செயலாளர் (அபிவிருத்தி) | SLAS (விசேட தரம்) | 01 | 01 | - |
| 4. சிரேஸ்ட உதவிச் செயலாளர் (நிர்வாகம்) | SLAS (தரம் 1) | 01 | 01 | - |
| 5. பிரதான கணக்காளர் | SLAccS (தரம் 1) | 01 | 01 | - |
| 6. பணிப்பாளர் (அபிவிருத்தி) | SLAS ((தரம் 1) | 01 | 01 | - |
| 7. பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) | SLPS(I I -I I/I I -I) | 01 | 01 | - |
| 8. பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி) | SLAS(I I I/LL) | 01 | 01 | 01 |
| 9. பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் (தொழில்நுட்பம் மற்றும் மருத்துவம்) | ஆயுர்வேத வைத்திய சேவை | 01 | 01 | - |
| 10. உதவிச் செயலாளர் (நிர்வாகம்) | SLAS(தரம் 111) | 01 | - | 01 |
| 11. கணக்காளர் | SLAccS(I I -I I/I I -I) | 01 | 01 | - |
| 12. கணக்காளர் (உள்ளகக் கணக்காய்வு ) | SLAccS(I I -I I/I I -I) | 01 | | 01 |
| 13. சட்ட அலுவலர் | | 01 | | 01 |
| 14. நிர்வாக அலுவலர் | அ.மு.உ.சே (உயர்) | 01 | 01 | - |
| 15. அபிவிருத்தி உதவியார் | தொடர்பு அலுவலர்கள் (Associate Officers) | 11 | 11<br>அமைச்சு - 04<br>யக்கல வைத்தியசாலை - 01<br>திணை. பின்னதுவ - 02<br>ச.சு.பி.சே - 04 | |
| 16. வழங்கல் உதவியாளர் | தொடர்பு அலுவலர்கள் (Associate Officers) | 02 | 02 | - |
| 17. புள்ளி விபர உதவியார் | தொடர்பு அலுவலர்கள் (Associate Officers) | 01 | 01 | - |
| 18. வரவு செலவுத்திட்ட உதவியாளர் | தொடர்பு அலுவலர்கள் (Associate Officers) | 01 | - | 01 |
| 19. அபிவிருத்தி அலுவலர் | | 05 | 05(பயிலுனர்கள்) | - |
| 20. மொழிபெயர்ப்பாளர் | மொழிபெயற்பாளர் சேவை | 01 | - | 01 |
| 21. செயலாளரின் இணைப்புச் செயலாளர் | - | 01 | 01 | - |
| 22. அரச முகாமைத்துவ உதவியார் | அ.மு.உ.சே I/II/III | 22 | 20 | 02 |
| 23. கமரா செயற்படுத்துனர் (வீடியோ) | திணைக்களத்திற்குரிய | 01 | 01 | - |
| 24. நிழல் புகைப்படக் கலைஞர் | திணைக்களத்திற்குரிய | 01 | - | 01 |
| 25. கமரா செயற்படுத்துனர் ( உதவியாளர்) | திணைக்களத்திற்குரிய | 01 | 01 | - |
| 26. சாரதி | சாரதிச் சேவை | 16 | 14 | 02 |
| 27. அலுவலக உதவியார்கள் | அலுவலக சேவையாளர் சேவை | 18 | 18 | - |
| 28. தொழிலாளர் | திணைக்களத்திற்குரிய | 01 | 01 | - |

# 3.1. அமைச்சின் ஒழுங்கமைப்பு வரைபடம்



# 03. சுதேசிய மருத்துவத்துறை அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள்



# 04. சுதேச மருத்துவத்துறை அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படும் அபிவிருத்தி கருத்திட்டங்கள்.

## 4.1 அநுராதபுரம் சமூகச் சுகாதார மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்.

2005 ஆண்டிலிருந்து நடைமுறையிலுள்ள இத்திட்டத்தின் பிரதான நோக்கம் விழிப்புணர்வினூடாக மக்களின் சுகாதார நிலைமைகளை விருத்தி செய்தலும் அதன் மூலம் அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுமாகும். இக்கருத்திட்டமானது அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள 22 பிரதேச செயலகத் தொகுதிகளை உள்ளடக்கும் வகையில் நடைமுறைப்படுத்தப்படுவதோடு அதற்காக கீழ்வரும் உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுள்ளனர்.

| | |
|---|---|
| கருத்திட்டப் பணிப்பாளர் | 01 |
| ஆயுர்வேத மருத்துவர் | 22 |
| சமூக சுகாதார மேம்பாட்டு உத்தியோகத்தர் | 210 |
| பதிவுபெற்ற ஆயுர்வேத மருத்தவர் | 84 |

**2012 ஜனவரி 01ம் திகதியில் இருந்து ஜூலை 31ஆம் திகதி வரையிலான முன்னேற்ற அறிக்கை**

| நிகழ்ச்சித்திட்டம | 2011 | 2012 |
|---|---|---|
| முழுமையான பாதுகாப்பு ( நோய் நிவாரணம்) | 1,197 | 1,809 |
| அறு சுவைகளும், போசணையும் | 1,319 | 1,739 |
| அழகிய சூழலும் எங்கள் வாழ்வும் | 854 | 3,060 |
| வீட்டு அலகுகளை அறிவூட்டுதல் | - | 21,465 |
| உளரீதியான மற்றும் ஆன்மீக ரீதியான மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் | 63 | 61 |
| சமூகச் சிகிட்சை நிகழ்ச்சித்திட்டம் | 226 | 748 |
| ஆயுர்வேத மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் | - | 248 |
| ஏனைய விசேட நிகழ்ச்சித்திட்டம் | - | 559 |
| சிகிட்சை முகாம் எண்ணிக்கை | 226 | 267 |
| நோயாளிகளின் எண்ணிக்கை | 8,067 | 12,121 |




| நிகழ்ச்சித்திட்டம் | பயன்பெறுநர்களின் எண்ணிக்கை |
|---|---|
| சமூக சுகாதார பிரதேச காரியாலய நிர்மாணம் | 134634 |
| இளைஞர் மூலிகைப் பயிற்ச்செய்கைக் கருத்திட்டம். | 150 |
| மூலிகைத் தோட்டம் | அனைத்து ஆயுர்வேத வைத்தியசாலைகளுக்கும் |
| நடமாடும் சிகிட்சை முகாம்களை நடாத்துதல் | 52800 |
| 05 வயதிற்கு குறைந்த பிள்ளைகளின் போசணை நிலமையை அளவிடும் ஆய்வு | 20000 |
| அரச அலுவலர்களின் தொழில் சுகாதாரத்தைப் பாதுகாக்கும் நிகழ்ச்சித்திட்டம் | அனைத்து அரச அலுவலர்களுக்கும் |
| கர்ப்பிணிப் பெண்களுக்கான விசேட நிகழ்ச்சித்திட்டம் | 13200 |
| சிறுவர் மற்றும் தாய் போசணை நிகழ்ச்சித்திட்டம் | 10560 |
| சேதன வீட்டுத் தோட்டப் பயிற்ச்செய்கை | 1500 |
| உள்நாட்டு உணவுவகைகளை பிரபல்யப்படுத்தும் போசணை நிகழ்ச்சித்திட்டம் | 50000 |
| மக்கள் நிவாரண சேவை நிகழ்ச்சித்திட்டத்தில் வைத்திய சிகிட்சை முகாம்களை நடாத்துதல் | 11000 |
| சிறுநீரக நோயாளர்கள் பற்றிய ஆய்வு | 2500 |
| முழுமையான மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் | 40000 |
| ஆயுர்வேத எண்ணக்கருவினை செயற்படுத்தல் | 26520 |
| முதியோர் சிகிட்சை சேவை நிகழ்ச்சித்திட்டம் | 15000 |

2011ஆம் ஆண்டில் இருந்து 2012 டிசம்பர் 31ம் திகதி வரை இக்கருத்திட்டங்கள் மூலம் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய முன்னேற்றங்கள் இதன் மூலம் காட்டப்பட்டுள்ளதுடன், இங்கு அனுராதபுர மாவட்டத்தில் பரந்தளவில் காணக்கூடிய சிறுநீரக நோய் தொடர்பாக விசேட கவனமெடுக்கப்பட்டு, இது தொடர்பாக ஆயுர்வேதத்தின் மூலமான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அங்கு

பெற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களின் அடிப்படையில் அறிவூட்டல் மற்றும் சிகட்சை முகாம்கள் நடாத்தப்பட்டது. சிறுநீரக நோய் உள்ள குடும்பங்கள் தொடர்பாக விசேட கவனம் எடுக்கப்பட்டது.

## 4.2 இளைஞர் மூலிகை விவசாயக் கிராம நிகழ்ச்சித்திட்டம்



தற்போது உள்ளநாட்டு மூலப்பொருட்களுக்கு காணப்படும் கேள்விக்கு வழங்கல் போதுமானதாக இல்லையாதலினால், அவை இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுவதுடன், அதற்காக பாரியளவு அந்நியச் செலவாணி செலவிடப்படுகின்றது. அத்தோடு இந்நாடுகள் ஏற்றுமதியில் கட்டுப்பாடுகளை விதித்துள்ளதனால், இறக்குமதியில் சிக்கல்கள் காணப்படுகின்றது. இதற்கு தீர்வாக இளைஞர்களை மூலிகைச் செடிகளை வளர்ப்பதற்கு ஊக்குவிப்பதன் மூலம் மேலதிக வருமானத்தை ஈட்டிக்கொள்வதற்கு வழியமைத்துக் கொடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

### 4.2.1 கருத்திட்டத்தின் மூலம் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள்.

- 5 அங்கத்தவர்களைக் கொண்ட 50 மூலிகை வளர்ப்பு அமைப்புகளை ஒழுங்கமைத்தல்
- மூலிகை வளர்ப்பு தொடர்பான அறிவையும் வழிகாட்டலையும் வழங்குவதோடு, குழுவேலைகள் தொடர்பான புரிதலை ஏற்படுத்துதல்.
- ஒரு குழுவிற்கு அதன் முன்னேற்றத்தின் அடிப்படையில் பகுதி பகுதியாக ரூபா 60.000ஐ வழங்குதல்.
- இடையறாத பின்ஆய்வும் சந்தை வாய்ப்பைப் பெற்றுக்கொடுத்தலும்.



## 4.3 போசணை நிலையங்கள் நிகழ்ச்சித்திட்டம்

இத்திட்டத்தின் அடிப்படை நோக்கம் சுதேச மருத்துவ முறைமையைப் பயன்படுத்தி மக்களின் யோசனை மட்டத்தை விருத்தி செய்வதே ஆகும். ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் போசணை நிலையங்களை அமைத்தல், இலைக்கஞ்சி, மூலிகைச் சாறு உற்பத்தி வண்டிகளை வழங்குவதனூடாக இந்த இலக்கு அடையப்படும். ஏற்கனவே 16 வண்டிகள் இலைக்கஞ்சி தயாரிப்பதற்காக வழங்கப்பட்டுள்ளன. 2012ஆம்

ஆண்டு தயட கிருள நிகழ்ச்சித்திட்டத்திற்காக 05 இலைக்கஞ்சி வண்டிகள் அனுராதபுர மாவட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

அத்தோடு நயினாதீவில் இலைக்கஞ்சி நிலையத்தினை அமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு, 2013ஆம் ஆண்டு அம்பாறை மாவட்டத்தில் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள தயட கிருள நிகழ்ச்சித்திட்டதிற்கு 5 இலைக்கஞ்சி வண்டிகளை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.



## போசணை நிகழ்ச்சித்திட்டம்.






## 4.4 உள்ளூர் உணவுப் பழக்கம் மற்றும் ஆயுர்வேத வாழ்க்கை குறிகாட்டிகள் தொடர்பான விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டம்



நோயற்றதும், ஆரோக்கயமானதுமான சமூதாயமொன்றினைக் கட்டியொழுப்பும் நோக்கோடு, சுதேச வைத்திய முறையில் சிகிட்சைகளை மேற்கொள்ளல், உள்நாட்டு உணவுப் பழக்க வழக்கங்கள், சுகாதாரப் பழக்க வழக்கங்கள், கை மருந்து மற்றும் உணவினைத் தயாரிக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய போசணை விடயங்கள் மற்றும் போசணையை அதிகரிப்பதற்கும் அவற்றினை பாதுகாப்பதற்கான விடயங்கள் தொடர்பாகவும், அவற்றினை வாழ்க்கை முறையில் பின்பற்றுவது எவ்வாறு என்பது தொடர்பாகவும் அரச மற்றம் அரச கூட்டுத்தாபனங்கள், அதிகார சபைகள் மற்றும் தனியார் நிறுவனங்களைச் சேர்ந்த அலுவலர்களை அறிவூட்டுவதற்கான இரண்டாவது செயலமர்வு அமைச்சினால் 2012.10.18இல் குருநாகல் மாகாண சபை கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட்டது.

சுதேசிய வைத்திய முறை தொடர்பாக தேசிய நிறுவனத்தின் ஊடாக ஒழுங்குசெய்யப்பட்ட இந்த செயற்திட்டத்தில் பல்வேறு நிறுவனங்களைச் சேர்ந்த 600ற்கும் மேற்பட்ட நபர்கள் பங்குபற்றியதுடன், அவர்களின் வேண்டுகோளின் அடிப்படையில் இந்நிகழச்சித்திட்டம் அந்நிறுவன மட்டத்தில் செயற்படுத்தப்படுகின்றது.



நிகழ்ச்சி



## 4.5 சுதேச மருத்துவ இல்லம் நிகழ்ச்சித்திட்டம்

பிரதேச செயலக மட்டத்தில் நோயாளர்களுக்கு தங்கியிருந்து ஆயுர்வேத சிகிச்சை பெறுவதற்கு சந்தர்ப்பத்தினை வழங்குவதற்காக அமைச்சினால் இத்திட்டம் அமுல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தால் பாரம்பரிய மருத்துவர்களுக்காக 10 கட்டில்களைக் கொண்ட சுதேச மருத்துவ இல்லங்களை அமைத்துக்கொள்ள ஒத்துழைப்பு வழங்கப்படுகிறது. அமைச்சு இவ்வாறான ஓர் இல்லத்திறென ரூபா 12 மில்லியனை செலவிடுவதோடு எஞ்சிய தொகையை மருத்தவர் ஏற்க வேண்டும். இத்திட்டம் 2004 ஆண்டிலிருந்து நடைமுறையில் இருப்பதோடு, இதன் கீழ் 14 மாவட்டங்களில் 38 இல்லங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இதில் அதிகமான இல்லங்கள் அனுராதபுர மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அதன் எண்ணிக்கை 8 ஆகும்.





**மாத்தறை திஹாகொட மருத்துவ இல்ல திறப்பு விழா**

## 05. அமைச்சுகளுக்கிடையிலான ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்

சுதேச மருத்துவத்துறை அமைச்சு ஏனைய அமைச்சுகளுடன் இணைந்து பல நிகழச்சித்திட்டங்களை செயற்படுத்துகின்றது.

- இராணுவ உடன் மருத்துவ இல்ல நிகழ்ச்சித்திட்டம்
- ஜனாதிபதி செயலகத்துடன் *'பன்செலன் கமட' நிகழ்ச்சித்திட்டம்*
- பொருளாதார அபிவிருத்தி அமைச்சுடன் *'திவிநெகும' நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கல்*
- புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சுடன் 'மூலிகை வளர்ப்பு' நிகழ்ச்சித்திட்டம்
- கல்வி அமைச்சுடன் 'பாடசாலை மூலிகைத் தோட்டங்கள்' நிகழச்சித்திட்டம்

- கலாச்சார மற்றும் கலை நடவடிக்கைகள் அமைச்சுடன் ஆதிவாசிகளின் வைத்தியம், பாதுகாப்பு மற்றும் மூலிகை வளர்ப்பு நிகழச்சித்திட்டம்
- தேசிய மரபுரிமைகள் அமைச்சுடன் 'பாரம்பரிய வைத்திய இல்லம்' *(ஹெலவெத பியச) நிகழ்ச்சித்திட்டம்*
- ***தயாட கிருள*** *தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்*
- ***எஸ்போ 2011*** ஆயுர்வேத சர்வதேச கண்காட்சி

## 5.1 புனிதப் பிரதேசங்களில் மூலிகைத் தோட்டங்களை ஆரம்பித்தல்

பிரதேச செயலக மட்டத்தில் உள்ள புனித இடங்களில் மூலிகைப் பயிர்ச்செய்கை நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்படுவதுடன், இம்மூலிகைத் தோட்டத்திற்கு அவசியமான தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்படுவதோடு, இதற்கு அவசியமான விதைகள் மற்றும் பயிர்கள் அமைச்சினால் வழங்கப்படுகின்றது. இந்நிகழ்ச்சித்திட்டம் மக்கள் சுகாதார வைத்தியர்கள் மற்றும் மக்கள் சுகாதார உதவியாளர்களின் ஊடாக செயற்படுத்தப்படுகின்றது. அத்தோடு இதற்காக இதுவரையில் 4,500. புனித இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

